## குளித்தலை நகராட்சி

31.01.2018.ஆம் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. தமிழ்நாடு அரசு நிதி (படிகள்) துறை அரசாணை எண்.6, நாள்–06.01.2018, மிகை ஊதியம் 2016–2017.ஆம் கணக்கு ஆண்டிற்கு தற்காலிக மிகை ஊதியம் மற்றும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் வழங்குதல் – ஒப்பளிப்பு – ஆணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.113/2018/சி1)

பொருள்–02. குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஜனவரி–2018.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–03. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி–2018.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–04. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்கள் (5 இனங்கள்) 31.03.2018.ல் முடிவடைவதால், பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 31.01.2018.ல் நடைபெற்றது. இதில், நவீன கழிவறையில் தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் மட்டும் ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கீழ்க்கண்ட விபரப்படி குத்தகை இனங்களுக்கு (01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டு குத்தகை) பகிரங்க **மறு** பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | உரிமையாணை இன விபரம் | முதல் ஆண்டுக்கான முதல் பொறுப்பு தொகை | தேவையான சால்வன்சி | சொத்து மதிப்பு இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை |
|---|---|---|---|---|
| 1) | பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகள் மற்றும் ஆட்டோ முதலிய வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 5,00,000/– | 12,00,000/– | 5,00,000/– |
| 2) | 2–சக்கர ஊர்திகள் நிறுத்துமிடம் | 3,00,000/– | 5,00,000/– | 3,00,000/– |
| 3) | தினசரி சாலைஓரக் கடைகளில் வசூல் செய்துகொள்ளும் உரிமம் | 5,00,000/– | 15,00,000/– | 5,00,000/– |
| 4) | ஆடு அடிக்கும் தொட்டி கட்டணம் வசூல் உரிமம் | 75,000/– | 1,50,000/– | 75,000/– |

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3166/2017/அ1)

..2..

பொருள்– 05. இந்நகராட்சி (2018–2021 ஆண்டுக்கான உரிமம்) நவீன கழிவறையில் தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமத்திற்கு 31.01.2018.ஆம் தேதியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு ஓராண்டிற்கு உச்ச ஏலக்கேள்வி கேட்கப்பட்டது. அதன் விபரம்

| | | |
|---|---|---|
| 1) | திரு.M.S.V.முனிச்சாமி, த/பெ.எஸ்.வையாபுரி,<br>19, எருமைக்காரத்தெரு, திண்டுக்கல் – 624 001. | ரூ.1,16,000/– |
| 2) | திரு.R.வைரப்பெருமாள், த/பெ.ராஜலிங்கம், புதுப்பாளையம்,<br>வைகநல்லூர்– PO., குளித்தலை–TK. | ரூ.1,17,000/– |

மேற்காணும் இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரவில்லை. மேலும், உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக திரு.R.வைரப்பெருமாள் என்பவர் ரூ.1,17,000/–க்கு கேட்டுள்ளார். இது சென்ற ஆண்டு உரிமத் தொகைவிட ரூ.29,351/– மற்றும் மூன்று சராசரி உரிமத்தொகை காட்டிலும் ரூ.33459/– கூடுதலாக உள்ளது. திரு.R.வைரப்பெருமாள் என்பவரது உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை ஊர்ஜிதம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.3166/2017/அ1)

பொருள்– 06. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5098 என்ற எண்ணுள்ள ஆட்டோவிற்கு வீல்பட்டை மாற்றி ஆயில் சர்வீஸ் செய்து பழுதுநீக்கம் செய்ய ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் 05.01.2018 தேதிய முன்அனுமதி பெற்று சர்வீஸ் செய்தமைக்கு ரூ.4376/–க்கு தொகை வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது நிதியிலிருந்து V.S.T. நிறுவனத்திற்கு ரூ.4376/–யை வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.17/2018/எச்1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள ஆடுவதை சாலையின் அனுமதியினை புதுப்பிக்க ரூ.41,400/– கட்டணம் 'District Environmental Engineer, Tamil Nadu Polution Control Board, கரூர்' அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). அவசர அவசியம் கருதி ஆணையர் (ம) தனி அலுவலர் முன்அனுமதி பெற்று செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2050/2017/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சியில் பொது விநியோகம் செய்யப்படும் குடிநீர் தரத்தினை TWAD மூலம் தர பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம் ஆகும். அதற்கான ஓராண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). ஆணையர் (ம) தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ஜனவரி, பிப்ரவரி–2018.ல் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.717/2014/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி அலுவலக உபயோகத்திற்கான ஜெனரேட்டர் அவசர அவசியம் கருதி, ஆயில் சர்வீஸ் செய்யப்பட்டது. அதற்கான பாரத் டீசல் நிறுவனம் செலவின தொகை, நாள்–18.12.2017 பட்டியல்படி ரூ.2742/–ஐ, மின்கம்பியாளர் திரு.க.ராஜேந்திரன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). ஆணையர் (ம) தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.3298/2017/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சியில் தெருவிளக்குகளை "எல்.இ.டி." விளக்குகளாக மாற்றுதல், பராமரித்தல், எனர்ஜி ஆடிட் பணிக்காக, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சேலம் மண்டல அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரி செய்திதாள் விளம்பரம் செய்ததற்கு, அக்கார்டு அட்வர்டைசிங் ஏஜன்சிஸ், சென்னை நிறுவன விளம்பரக் கட்டணத்தில் ரூ.6193/–, குளித்தலை நகராட்சியின் பங்குத் தொகை ஆகும். அதனை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு வங்கி வரைவோலையாக அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). ஆணையர் (ம) தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.876/2017/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சியின் குடிநீர் பிரிவு ஈப்பு வாகனம் TN-47-X-3173 ஆயுள் காப்பீடு 13.01.2018.ல் முடிவடைகிறது. அதன் ஆயுள் காப்பீட்டினை புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., நிறுவனத்திற்கு ரூ.12,660/–ஐ, செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). அவசர அவசியம் கருதி, ஆணையர் (ம) தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ரூ.12,660/– செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.3321/2017/இ1)

பொருள்– 12. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் பாதுகாப்பாக பணி புரிவதற்கு பாதுகாப்பு உபகரணங்கள் கையுரை–90, முகவுரை–90 எலட்ரிக் டார்ஜ்லைட்,5, குப்பை லாரிக்கு வலை–4, ரோப்புடன் கூடிய விசில் 50, ஆகிய பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.234, நாள்.30.11.2017–ல் அனமதித்ததின்பேரில் ஒப்பந்தப்புள்ளி 5.1.2018–ல் கோரியதில் கீழ்கண்ட ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பாதுகாப்பு உபகரணங்கள் | ஹரிணி ஏஜென்சீஸ் 1–ன்விலை | அப்துல்லா ஏஜென்சீஸ் 1–ன் விலை |
|---|---|---|---|
| 1. | கையுரை | Rs. 280 | Rs. 300 |
| 2. | முகவுரை | Rs. 70 | Rs. 80 |
| 3. | எலட்ரிக்கல் டார்ஜ்லைட் | Rs. 500 | Rs. 600 |
| 4. | குப்பைலாரிக்கு வலை | Rs. 10,000 | Rs.11000 |
| 5. | ரோப்புடன்கூடிய விசில் | Rs. 100 | Rs. 120 |

அலுவலக குறிப்பு– 1). வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஹரிணி ஏஜென்சீஸ் நாமக்கல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2). இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க..ண்.2905/2017/எச்1)

பொருள்– 13. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கையாக பொது இடங்கள், பொது கழிப்பிடங்கள், மற்றும் குடியிருப்பு வீடுகளில் உள்ள தொட்டிகள் பேருந்து நிலையம், ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்வதற்கு பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி நீர்த்த சுண்ணாம்புதூள்–2000 கிலோ, பிளிச்சிங் பவுடர்–2000 கிலோ ஆகிய கிருமி நாசி வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.233 நாள்.30.11.2017 அனுமதி பெறப்பட்டதின்பேரில் ஒப்பந்தப்புள்ளி 5.1.2018–ல் கோரியதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | கிருமி நாசிகள் | ஹரிணி ஏஜென்சீஸ் (கிலோ ஒன்றுக்கு) | அப்துல்லா ஏஜென்சீஸ் (கிலோ ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1. | நீத்த சுண்ணாம்பு தூள் | Rs. 9.50 பைசா | Rs.11 ரூபாய் |
| 2. | பிளிச்சிங் பவுடர் | Rs. 45 ரூபாய் | Rs. 47 ரூபாய் |

அலுவலக குறிப்பு– 1). வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஹரிணி ஏஜென்சீஸ் நாமக்கல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2). இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2905/2017/எச்1)

## குளித்தலை நகராட்சி

31.01.2018.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 1 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 2 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 3 | பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 4 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 5 | ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 6 | 6 | 6 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 7 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 8 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | 9 | 9 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | 10 | 10 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 11 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 12 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 13 | 13 | 13 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.